**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.10/2013 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | திரு. கருத்தபாண்டி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of April 2022.

நான் சிங்கிகுளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து அ.சா.ஆ. 3 ஆகும். நிபந்தனை ஜாமினில் கையெழுத்து செய்வதற்காக களக்காடு காவல்நிலையம் செல்லும் போது ஆஜர் எதிரிகள் காவல்நிலையத்தில் இருந்தார். போலிசார் ஆஜர் எதிரியை தெரியுமா என கேட்டார்கள். நான் தெரியும் என சொன்னேன். அதற்காக சாட்சியாக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது. வழக்கு பற்றி போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

30.05.2012 ம் தேதி காலை 9.00 மணிக்கு சம்பவ இடமான சிங்கிகுளம் ஊருக்கு கீழ்புறம் உள்ள பச்சையாற்று தரைபாலத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் நான்குநேரி அனைத்து மகளிர் காவல்நிலைய ஆய்வாளர் பொறுப்பு களக்காடு காவல் ஆய்வாளர் உங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.10/2013 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | திரு. ஜான்சன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of April 2022.

நான் தற்போது திசையன்விளை காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.05.2012 ஆம் தேதி 22.00 மணிக்கு நானும், 2623 அந்தோணி அவர்களும் நான்குநேரி அனைத்து மகளிர் காவல்நிலைய ஆய்வாளர் பொறுப்பு களக்காடு காவல்நிலையம் அவர்களும் கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் சிங்கிகுளம் டூ பாணான்குளம் ரோடு சிங்கிகுளம் ஊருக்கு கீழ்புறம் உள்ள தரைபாலம் அருகில் மணல் திருட்டு சம்மந்தமாக ரோந்து செய்து வரும் போது அதை ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக சிங்கிகுளம் இசக்கிதேவர் மகன் முண்டசாமி என்பவர் ஒரு மாட்டுவண்டியிலும், அதனை தொடர்ந்து துரைபாண்டி மகன் நம்பி என்பவர் ஒரு மாட்டுவண்டியிலும், பலவேச தேவர் மகன் கிருஷ்ணன் என்பவர் ஒரு மாட்டுவண்டியிலும் ஓட்டி வந்தவர்கள் சாட்சி ஆஜர் எதிரிகளை பல நாட்கள் ஆகிவிட்டதால் அடையாளம் தெரியவில்லை என கூறினார். எதிரிகள் போலிஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் மாட்டுவண்டியை நிறுத்திவிட்டு கீழே இறங்கி மணல் திருட்டு சம்பந்தமாக தாசில்தார் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும், காவல்துறைக்கு நடவடிக்கை எடுக்க எந்த உரிமையும் இல்லை இதையும் மீறி எங்கள் மீது நடவடிக்கை எடுத்தால் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டி விட்டு தப்பி ஓடி தலைமறைவாகிவிட்டார்கள். மேற்படி மாட்டுவண்டிகளை பார்வையிட அதில் தலா 20 சட்டி ஆற்றுமணல் இருந்தது. எதிரிகள் பற்றி விசாரிக்க அவர்கள் ஆற்றுமணலை திருடி எடுத்து விற்பனை செய்து வருவது தெரியவந்தது. மேற்படி மணலுடன் கூடிய மாட்டுவண்டிகளை காவல்நிலையம் எடுத்துசெல்ல காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தில் அத்தாட்சி பிறப்பித்தார்கள். அதில் தனிநபர் யாரும் கையெழுத்து செய்ய இல்லாததால் போலிஸ் பார்ட்டியாகிய நாங்களே கையெழுத்து செய்தோம். 23.45 மணிக்கு மணலுடன் கூடிய மாட்டுவண்டிகளை நிலையம்

கொண்டுவந்து வழக்கு பதிவு செய்ய காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான் **அந்த கையெழுத்து அ.சா.ஆ.2** ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகளை சம்பவத்திற்கு முன்பு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் தரைபாலத்திற்கு எந்த திசையில் நடந்தது என்றால் ஞாபகமில்லை. எதிரிகள் எந்த திசை பார்த்து ஓடினார்கள் என்றால் கிழக்கே பார்த்து ஓடினார்கள். எதற்காக ஓடினார்கள் என்றால் போலிசார் கைது செய்வார்கள் என பயந்து ஓடினார்கள். சம்பவ நேரம் இரவு இருட்டாக இருந்தது என்றால் சரிதான். சம்பவ நடக்கும் முன்பு எந்த ஊருக்கு சென்றுவிட்டு வந்தீற்கள் என்றால் களக்காடு காவல்நிலையத்திலிருந்து நேரடியாக சம்பவ இடத்திற்கு வந்தோம். சம்பவ இடத்திற்கு மேற்கிலிருந்து கிழக்காக வந்தீற்கள் என்றால் சரிதான், நாங்கள் சம்பவ இடத்தில் நிற்கும் போது வண்டி வந்தது. நீங்கள் மேற்கிலிருந்து கிழக்காக வந்து பாலத்தில் நின்றீர்கள் என்றால் சரிதான். மாட்டு வண்டி எந்த திசையில் வந்தது என்றால் மேற்கிலிருந்து கிழக்காக வந்தது. நீங்கள் களக்காடு அண்ணா சிலை அருகே பணியில் இருந்த போது தான் ஆய்வாளர் போன் மூலமாக அழைத்ததால் உடன் சென்றேன். நீங்களும், அ.சா.1 எதில் சென்றீற்கள் என்றால் ஆய்வாளர் வாகனத்தில் சென்றோம். ஆய்வாளர் வண்டியை யார் ஓட்டினார் என்றால் ஞாபகமில்லை. அத்தாட்சி யார் எழுதியது என்றால் ஆய்வாளர் சொல்ல சொல்ல நான் தான் எழுதினேன். சம்பவ இடத்திற்கு யார் சென்றது என அத்தாட்சியில் துலங்காது என்றால் சரிதான். வண்டியை யார் காவல்நிலையம் கொண்டு சென்றது என்றால் மூன்று டாடா ஏசி வண்டியை வைத்து தனிதனியாக இழுத்து சென்றோம். மாடுகளை என்ன செய்தீற்கள் என்றால் ஊருக்குள் உள்ள நபரிடம் ஒப்படைத்துவிட்டோம். சம்பவ இடத்தில் மக்கள் நடமாட்டம் இருந்ததா என்றால் இல்லை. எதிரிகள் பெயர் விலாசம் எப்படி தெரிந்து கொண்டிற்கள் என்றால் ஆய்வாளர் போன் செய்து விசாரித்து தெரிந்து கொண்டார். நீங்கள் கூறுவது போல் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை, நீங்கள் ரோந்திற்கு சென்றதாகவும், எதிரிகள் மிரட்டியதாக சொல்வதும், மணலுடன் மாட்டுவண்டியை கைபற்றியதாக சொல்வதும் உண்மை இல்லை என்றால் சரியல்ல. களக்காடு பச்சையாற்றில் களக்காடு காவல்துறையினா் ஆதரவுடன் திருட்டுதனமாக டாரஸ் லாரியில் மணலை அள்ளினார்கள், அதை கண்டித்து எதிரிகள் விவசாயிகள் சார்பாக மாவட்ட ஆட்சியரிடம் புகார் செய்து இருந்தார்கள், புகார் செய்திருந்ததால் எதிரிகள் வீட்டிலிருந்து கைது செய்து பொய் வழக்கு போட்டுள்ளீர்கள் என்றால் தெரியாது, சரியல்ல. அத்தாட்சி காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.10/2013 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திரு. அந்தோணி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of April 2022.

நான் தற்போது திருநெல்வேலி இருப்புபாதை காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.05.2012 ஆம் தேதி 22.00 மணிக்கு நான்குநேரி அனைத்து மகளிர் காவல்நிலைய காவல் ஆய்வாளர் பொறுப்பு களக்காடு காவல்நிலையம் அவர்களுக்கு உதவியாக நான் மற்றும் தலைமை காவலர் 2002 திரு. ஜான்சன் சகிதம் மணல் திருட்டு சம்பந்தமாக சிங்கிகுளம் டூ பாணான்குளம் ரோட்டில் ரோந்து செய்துவரும் போது சிங்கிகுளம் ஊருக்கு கீழ்புறம் உள்ள தரைபாலம் அருகில் மேற்கிலிருந்து கிழக்காக வந்த 3 மாட்டுவண்டிகளை சிங்கிகுளத்தை சேர்ந்த இசக்கிதேவர் மகன் முண்டசாமி, துரைபாண்டி மகன் நம்பி, பலவேசதேவர் மகன் கிருஷ்ணன் எதிரிகளை சாட்சி அடையாம் காட்டினார் ஆகிய மூவரும் கிழக்கு பார்த்து வந்தவர்களை போலிஸ் பார்ட்டியாகிய நாங்கள் வண்டியை நிறுத்த சொல்லி சைகை காட்டியதும் மேற்படி நபர்கள் மூன்றுபேரும் மாட்டுவண்டியில் இருந்து இறங்கி போலிஸ் பார்ட்டியாகிய எங்களை பார்த்து மணல் சம்பந்தமாக தாசில்தார் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும், போலிசார் நடவடிக்கை எடுக்க எந்தவிதமான அதிகாரம் கிடையாது மீறி எங்கள் பிழைப்பை கெடுத்தால் கொல்லாமல்விடமாட்டோம் என்று மிரட்டல் விடுத்தவர்களை பிடிக்க சென்ற போது மூவரும் இருட்டிற்குள் தப்பி ஓடி தலைமறைவாகிவிட்டார்கள். சம்பவ இடத்தில் விட்டுசென்ற மூன்று மாட்டுவண்டிகளை பார்வையிட்டதில் அதில் தலா 20 சட்டி அளவு ஆற்றுமணல் இருந்தது. எதிரிகள் மூவரும் சிங்கிகுளம் பச்சையாற்றில் இருந்து அரசு அனுமதியின்றி லாப நோக்கம் கருதி சட்டவிரோதமாக ஆற்று மணலை திருடி எடுத்துவந்ததும், அதனை தடுத்த போலிஸ்பார்டியாகிய எங்களின் அரசுவேலையை தடுக்கும் நோக்கத்தில் கொலைமிரட்டல் விடுத்து, தப்பி சென்றது தெரியவந்ததால் மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக காவல் ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தில் எதிரிகள்

விட்டுசென்ற ஆற்று மணலுடன் கூடிய 3 மாட்டுவண்டிகளை அத்தாட்சி தயார் செய்து கைபற்றினார்கள். அந்த அத்தாட்சியில் கையெழுத்து இட அந்த இடத்தில் தனி நபர் யாரும் இல்லாததால் போலிஸ்பாட்டியாகிய நானும், த.கா. திரு.ஜான்சன் அவர்களும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். அதன்பிறகு சம்பவ இடத்தில் நிறுத்தபட்டிருந்த சொத்துகளை காவல்நிலையத்திற்கு கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய காவல் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் **அந்த கையெழுத்து அ.சா.ஆ.1** ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவத்திற்கு முன்பு எதிரிகள் உங்களுக்கு பழக்கமா என்றால் ரோந்து செல்லும் போது தெரியும் எதிரிகளின் பெயர், அப்பா பெயர், ஊர் தெரியும். ரோந்திற்கு அரசு வாகனத்தில் தான் சென்றீர்கள் என்றால் சரிதான். ஜீப்பை யார் ஓட்டியது என்றால் ஜெயபால் என்ற த.கா. ஓட்டினார். அத்தாட்சியை யார் எழுதினார் என்றால் ஆய்வாளர் சொல்லசொல்ல ஜான்சன் எழுதினார். நீங்கள் எந்ததிசையில் சென்றீர்கள் என்றால் கிழக்கிலிருந்து மேற்காக சென்றோம். இரவு நேரம் என்பதால் வண்டிக்கு அருகில் செல்லும் முன் எதிரிகளுக்கு வரும் வாகனம் போலிசார் வாகனம் என்று தெரியாது என்றால் சரியல்ல, தெருவிளக்குகள் இருந்தது. வண்டியை பிடித்தது தரைபாலத்திற்கு எந்த திசை என்றால் தரைபாலத்திற்கு மேற்குபுறம். நீங்கள் வண்டியை நிறுத்திய போது சம்பவ இடத்தில் ஆட்கள் நடமாட்டம் இருந்ததா என்றால் இல்லை. எதிரிகள் எதனால் ஓடினார்கள் என்றால் எதிரிகள் போலிசாரை பார்த்ததும் பயந்து ஓடினார்கள். எந்த திசையை நோக்கி ஓடினார்கள் என்றால் வடக்கு திசையை நோக்கி ஓடினார்கள், 50 மீ விரட்டினோம். அத்தாட்சி தயார் செய்ய எவ்வளவு நேரம் ஆனது என்றால் அரை மணி நேரம். மாட்டுவண்டியை யார் காவல்நிலையத்திற்கு ஓட்டி சென்றது என்றால் மாடுகளை அங்கேயே ஊர்காரர்களிடம் ஒப்படைத்துவிட்டு வேறுஒரு வண்டியில் கட்டி இழுத்து சென்றோம். மாட்டை ஒப்படைத்த நபர் தெரியுமா என்றால் தெரியாது. ஒத்தகாளை மாடா, இரட்டை காளை மாடா என்றால் இரட்டைகாளை மாடு மற்றும் டயர் வண்டி ஆகும். எதிரிகளின் பெயர், விலாசத்தை யார் ஆய்வாளரிடம் கூறினார் என்றால் தெரியாது நான் சொல்லவில்லை. காவல்நிலையத்திற்கு எப்போது சென்றீர்கள் என்றால் 23.45 மணிக்கு சென்றோம். முதல்தகவல் அறிக்கை யார் பதிவு செய்தது என்றால் தெரியாது. 20 சட்டி மணல் என்று எவ்வாறு முதல்விசாரணையில் சொல்லி உள்ளீர்கள் என்றால் தோராயமாக சொன்னேன். வண்டியை கைபற்றிய பிறகு நேரடியாக காவல்நிலையம் சென்றீர்களா என்றால் சரிதான். உங்களை விசாரணை செய்த ஆய்வாளர் பெயர் என்ன என்றால் திருமதி.ஜெயா பிரின்ஸ் ஆவார். நீங்கள் கூறுவது போல் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை, நீங்கள் ரோந்திற்கு சென்றதாகவும், எதிரிகள் மிரட்டியதாக சொல்வதும், மணலுடன் மாட்டுவண்டியை கைபற்றியதாக சொல்வதும் உண்மை இல்லை என்றால் சரியல்ல. களக்காடு பச்சையாற்றில் களக்காடு காவல்துறையினர் ஆதரவுடன் திருட்டுதனமாக டாரஸ் லாரியில் மணலை அள்ளினார்கள், அதை கண்டித்து எதிரிகள் விவசாயிகள் சார்பாக மாவட்ட ஆட்சியரிடம் புகார் செய்து இருந்தார்கள், புகார் செய்திருந்ததால் எதிரிகள் வீட்டிலிருந்து கைது செய்து பொய் வழக்கு போட்டுள்ளீர்கள் என்றால் தெரியாது, சரியல்ல. அத்தாட்சி காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**